**சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் - 2020**

சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 28 ஆம் திகதிய 5915–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் II பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. இலங்கையிலுள்ள வறுமை மற்றும் பாதிப்பிற்குள்ளான குழுக்களின் நலன்களிற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட மூலதனம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட செயற்பாடுகள் 03 கூறுகளைக் கொண்டிருந்ததுடன் செயற்திட்டச் செயற்பாட்டுக் கையேட்டின் 4.2.3 ஆம் பந்தியின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு செயற்திட்டக் கூறுகளின் செயலாற்றல் தொடர்பான அபிப்பிராய அறிக்கைகள் தனித்தனியாக வழங்கப்பட வேண்டும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,212.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் தொகையானதுடன் செயற்திட்டத்தின் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

**2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் வேலை மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் அக் கூறுகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றமானது மிகவும் குறைந்த முன்னேற்றத்தில் காணப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அக் கூறுகளின் அவதானிப்புக்கள் பின்வருமாறு உள்ளன.

| | கூறுகள் | கூறின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றை தயாரித்தல் | நலன்புரி நலன்கள் சபையின் ஸ்தாபிப்பு மற்றும் முழுமையான செயற்பாடு | 2017 ஆம் ஆண்டில் நலன்புரி நலன்கள் சபை நிறுவப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்தவாறு அது செயற்படவில்லை. மேலும் சபையின் தலைவர் 2019 திசெம்பர் 06 இல் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமையும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 23 வரையிலும் புதிய தலைவர் நியமனம் செய்யப்பட்டிருக்காதமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. | நலன்புரி நலன்கள் சபை சுமூகமாக செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தலைவரை நியமிப்பதற்கும் முக்கிய பதவிநிலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | நலன்புரி நலன் திட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நுழைவு மற்றும் வெளியேறல் தொடர்பான முறையான கொள்கையொன்றின் அங்கீகாரமும் வெளியீடும். | கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 23 வரையிலும் புதிய நலன்புரி நலன்கள் திட்டத்திற்காக செயற்திட்டமானது பாராளுமன்றம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திலிருந்து அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | 2019 நவம்பரில் இருந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக பிரமாணங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | நலன்புரி நலன்கள் திட்டத்தின் வர்த்தமானி அறிவித்தலை அங்கீகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறைமை | நலன்புரி நலனகள் திட்ட பயனாளிகள் தகுதியான அளவுகோல்களின் (eligibility criteria) கீழ் தகைமையை பெற்றுக்கொள்ளுதல். | 2019 யூன் 20 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் தகுதிக்கான அளவுகோல்கள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வர்த்தமானியை பாராளுமன்றம் அங்கீகரித்திருக்கவில்லை. அளவுகோல் அடிப்படையிலான தெரிவுசெய்தலை அமுல்ப்படுத்துதல் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்றம் கலைக்கப்பட்டதனால் வர்த்தமானியை அங்கீகரிக்க முடியாதிருந்தது. மீள்கட்டமைக்கப்பட்ட ஆவணத்தில் இந்த விநியோக இணைப்பு பெறுபேறு இலக்கு மாற்றப்பட்டுள்ளது. | பொறுப்புள்ள தரப்பினரை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக நெருக்கமான மேற்பார்வை அவசியமாகும். |
| | | செயற்திட்ட தொழில்நுட்ப கூடத்தை (Technical Cell) நிறுவுதல் | முன்னைய ஆண்டில், கூறு - 02 இன் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு சமுர்த்தி திணைக்களத்தினுள் செயற்திட்ட தொழில்நுட்ப கூடத்தை நிறுவுவதற்கு பணிக்குழு ஆலோசனை வழங்கிய போதிலும் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப கூடத்தை நிறுவுவதற்கு செயற்திட்ட அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - | தொழில்நுட்ப கூடத்தை நிறுவுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு மூலோபாயத்தின் விரிவான மதிப்பீட்டை நடாத்துதல் மற்றும் இலங்கைக்கான தேசிய சமூக பாதுகாப்பு மூலோபாயத்தை உருவாக்குதல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் 2019 சனவரி 22 இல் ரூபா 14.1 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஆலோசனை நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டு 2019 | இணங்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் தேசிய சமூக பாதுகாப்பு மூலோபாயத்தை உருவாக்குவது தாமதமாகியிருந்தது. MultiTech solutions வழங்கிய வரைவு மதிப்பீட்டு அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு நான்கு மாதங்களுக்கும் மேலான காலம் எடுத்திருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் இடைவெளிகள் இனங்காணப்பட்டு, கருத்துரைகள் உடனடியாக ஆலோசனையாளர் மற்றும் மீளாய்வுக் குழுவுடன் பொது மன்றத்தில் (common forum) | இது தொடர்பாக பொறுப்புள்ள தரப்பினரை அறிவூட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செப்தெம்பர் 01 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 23 வரையிலும் உரிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1.41 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கலந்துரையாடப்படும். | |
| (ஆ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தகுதி மூலோபாயத்தை (Graduation strategy) அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 2.4 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தனிப்பட்ட ஆலோசனையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் தகுதி மூலோபாய அறிக்கையின் முதல் வரைவு என்பன ஒப்பந்த திகதியிலிருந்து 15 வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது ரூபா 240,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. அறிக்கை 2019 யூலை 09 அளவில் வழங்கப்பட்டதுடன் 2019 யூலை 24 இல் ரூபா 2.5 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளிற்கு இணங்க ஒப்பந்ததாரர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |